# சுவிஸ் தமிழர்இல்லம்

அனைத்துலக ரீதியில் நடாத்தும் தமிழீழ கிண்ணத்திற்கான

# தமிழர் விளையாட்டு விழா 2018

**தமிழீழக்கிண்ணம்-2018**

Sportanlage Deutweg und Talgut, Winterthur, Zürich. 11 / 12 – Aug.2018 Saturday - Sunday

தமிழர் விளையாட்டு விழா-2018 ஆரம்ப நிகழ்வாகிய, கொடியேற்றல், கொடிவணக்கம், அகவணக்கம் நிகழ்வுகளின் போது, மைதானத்திற்கு வருகை தந்திருக்கும், வீரர்கள், கழகங்கள் மற்றும் அனைவரும் தமது சீருடைகளுடன் ஆரம்ப நிகழ்வு நடைபெறும் இடத்தில் பிரசன்னமாயிருத்தல் அவசியம். தவறும் பட்சத்தில் குறித்த வீரர்கள், கழகங்கள் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகமையிழந்தவர்களாக கருதப்படுவர்.

ஏற்பாட்டுக்குழு
தமிழர் விளையாட்டு விழா-2018

**உதைபந்தாட் சுற்றுப்போட்டி –**
**அறிவுறுத்தல்களும் விதிமுறைகளும்**

**9, 11, 13, 15, 17, 35 வயது மற்றும் பெண்கள் பிரிவினர்**

1. சீரற்ற காலநிலை மற்றும் தவிர்க்க முடியாத காரணங்கள் இருப்பின் சுற்றுப் போட்டியின் நேரஅட்டவணை, ஆட்ட நேரம்,மைதானம் போன்றவற்றில் மாற்றம் செய்யும் உரிமை சுற்றுப்போட்டி அமைப்பாளருக்கு உண்டு.

2. கழகப்பொறுப்பாளர்கள் தங்களது இரண்டாவது ஆட்டத்திற்கு முன்னர் வீரர்களின் பெயர்ப் பட்டியலுடன் வதிவிட அனுமதிப்பத்திரத்தின் பிரதி அல்லது கடவுச்சீட்டு பிரதி அல்லது STFA அடையாள அட்டையின் பிரதி / இலக்கம் அனுமதிக்கட்டணம் செலுத்திய தபாற்கட்டளையின் பிரதி ஆகியவற்றை இணைத்து அலுவலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும்.

3. வேற்று இனத்தவர்களின் அடையாளஅட்டை அல்லது கடவுச்சீட்டு ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர், அலுவலகத்தில் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. ஆட்டம் தொடங்கிய பின் தரப்படும் வீரர்களின் பெயர்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.ஒரு வீரர் தாமதமாக வருகை தர இருப்பின் அவரின் பெயரினையும் பெயர் பட்டியலில் முதலே இணைக்வும்.குறித்த வீரர் மைதானத்திற்கு வருகை தந்ததும் அலுவலகத்தில் வவினை உறுதிப்படுத்தி கையொப்பமிட்டு ஆட்டத்தில் பங்கெடுக்கலாம்

5. **ஒரு வீரர் தனது வயதினை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம் ஏதும் இல்லாதவிடத்து ஆட்டத்தில் கொள்வதற்கான அனுமதி மறுக்கப்படும்.**

6. **ஒரு வீரர் தனது வயதினை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம் ஏதும் இல்லாது விளையாடி அது நிரூபிக்கப்பட்டால்**

   - **குறிப்பிட்ட வீரரைக்கொண்ட அணி தனது வெற்றி வாய்ப்பை இழக்கும்**
   - **தொடர்ந்து நடைபெறும் மூன்று சுற்றுப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கான அனுமதி மறுக்கப்படும்**
   - **சுற்றுப்போட்டியில் இருந்து முற்றாக வெளியேற்றப்படும்**
   - **குற்றப்பணமாக 600 சுவிஸ் பிராங்குகள் அறவிடப்படும்**
   - **பயிற்சியாளர் ஒரு வருடகாலம் அணி தொடர்பான பணிகளில் பணியாற்றுவதற்கான அனுமதி மறுக்கப்படும்**
   - **அக்குழுவுக்குள் இருக்கும் எந்த அணிக்கும் எந்தப் புள்ளியும் வழங்கப்படமாட்டாது. குறித்த அணி ஏற்கனவே ஆட்டத்தில் பங்குபற்றியிருப்பினும் இந்த நடைமுறை பொருந்தும்.**

7. எதிரணி சம்பந்தமான ஆட்சேபமனு, தங்களுக்கிடையில் நடைபெற்ற போட்டி முடிவடைந்து பத்து நிமிடங்களுக்குள் ஆதாரங்களுடன் இதற்கென உரிய 'பாதுகாப்பு முறைப்பாட்டுப் படிவம்' பூர்த்திசெய்யப்பட்டு பிணைப்பணமாக 20 சுவிஸ் பிறாங்குகள் சேர்த்து தாக்கல் செய்யப்படவேண்டும். முறைப்பாட்டின் பெறுபேறு முறைப்பாட்டாளருக்கு சாதகமாக இருப்பின் பணம் மீளளிக்கப்படும். பாதகமாக இருப்பின் பிணைப்பணம் மீளளிக்கப்படமாட்டாது

8. **ஒரே நாளில் நடாத்தப்படும் இருவேறு வயதுப் பிரிவுகளுக்கான சுற்றுப்போட்டியில் ஒரு வீரர் ஏதாவது ஒரு பிரிவுக்காக மட்டுமே ஆடமுடியும்.ஒரு பிரிவுக்கான போட்டி முடிவடைந்த பின்னர் அல்லது சுற்றுப்போட்டியில் தங்கள் அணி தொடர்ந்து ஆடும் சந்தர்ப்பத்தினை இழந்த பின்னர் அலுவலகத்தின் உறுதிப்படுத்தலுடன் வேறு பிரிவுக்கு விளையாடலாம்**

9. 9,11,13,15, 17,35 மற்றும் பெண்கள் பிரிவுகளுக்கு ஓப்சைட் இல்லை.

10. வீரர்கள் காற்கவசம், இலக்கமிடப்பட்ட ஒரே நிறத்திலான சீருடை அணிந்திருத்தல் வேண்டும்.

11. அணித்தலைவர் தனக்கான கைப்பட்டியை அணிந்திருத்தல் வேண்டும்.

12. 09, 11, 13 அணிகளுக்கு பந்து இல.4 அளவுடையதாகவிருக்கும்.

13. 15, 17, 35, பெண்கள் அணிகளுக்கு பந்து இல.5 அளவுடையதாகவிருக்கும்.

14. 09, 11, 13, 15, 17, 35 வயதுப்பிரிவுகளில் 2 வேற்று இனத்தவர்கள் விளையாடலாம்.

15. பெண்கள் பிரிவுகளில் 3 வேற்று இனத்தவர்கள் விளையாடலாம்.

16. **முன்அனுமதியுடன் கழகம் விட்டு கழகம் மாற அனுமதி உண்டு. (சுவிஸ் கழகங்களுக்கு மட்டும்.)**

**Rückpass**

17. **09, 11, பெண்கள் பிரிவுகளில் விளையாடுபவர்கள் பந்து காப்பாளரிடம், பந்தை தட்டிக்கொடுத்து அதைக்கையால் பிடிக்க அனுமதி உண்டு. 13,15,17, 35 வயதுப்பிரிவுகளுக்கு இந்நடைமுறை பொருந்தாது.**

18. ஐந்து வீரர்களை மட்டும் மாற்றலாம். இவர்கள் எத்தனை தடவையும் மாறலாம்.

19. போட்டியானது குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமாகும். ஆரம்ப நேரத்தில் பிரத்தியேக அழைப்பு விடப்படமாட்டாது. குறிப்பிட்ட நேரத்தில் இருந்து ஐந்து நிமிடங்களுக்குள் இரு அணிகளும் மைதானத்தில் சமூகம் தாராவிடில் இரு அணிகளுக்கும் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. ஒரு அணி சமூகம் தந்திருக்கும் பட்சத்தில் 3:0 என்ற முறையில் புள்ளிகள் வழங்கப்படும்.போட்டிகள் யாவும் இளந்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம், சுவிஸ் தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம் மற்றும் தமிழீழக் கிண்ணத்திற்கான பிரத்தியேக விதிமுறை களுக்கு அமைவாக நடாத்தப்படும்.

20. **வயதுப்பிரிவுகள் பிறந்த ஆண்டினை அடிப்படையாகக்கொண்டு அமையும். குறித்த வயதுப்பிரிவு வீரர் அந்த ஆண்டின் ஜனவரி 1ம் திகதிக்குப் பின்னர் குறித்த வயதை பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும். (உம்: 9 வயதுப்பிரிவு 2009 அல்லது அதற்குப்பின் பிறந்தவராக இருத்தல் வேண்டும்.**

21. ஆட்டத்திற்கான பந்தை இரு அணிகளும் கொண்டுவருதல் வேண்டும். ஆட்டத்திற்கான பந்தை நடுவர் தீர்மானிப்பார்.

22. **குழுநிலைத் தெரிவின் போது இரு அணிகள் சம புள்ளிகளைப் பெற்றிருப்பின், அடித்த கோல்களில் இருந்து வாங்கிய கோல்களை கழித்தல் எனும் அடிப்படையிலும் தொடர்ந்தும் சமநிலை காணப்படின், அதிக கோல்களைப் போட்ட அணி எனும் அடிப்படையிலும், அதிலும் சமநிலை காணப்படின், குறித்த இரு அணிகளும், ஒன்றையொன்று எதிர்த்து ஆடிய போட்டியில் வெற்றி பெற்ற அணி தெரிவாகும். இதிலும் சமநிலை காணப்படின் தண்டனை உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும்.**

23. மூன்று அணிகள் சமநிலையில் இருப்பின் தலா 5 தண்டனை உதை வழங்கப்பட்டு வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும்.(**ஐந்தும் முழுமையாக அடிக்கவேண்டும்**). தண்டனை உதையிலும் சமநிலை காணப்படின் அடித்த கோல்களில் இருந்து வாங்கிய கோல்களைக் கழித்தல் என்னும் அடிப்படையிலும் அதிலும் சமநிலை காணப்படின் அதிக கோல்களைப் போட்ட அணி தெரிவாகும். தொடர்ந்தும் சமநிலை காணப்படின் 3 தண்டனை உதை வழங்கப்படும்.அதிலும் சமநிலை காணப்படின் நாணயச் சுழற்சி மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும்

- **A vs B = 5.4    A vs C = 3.4    B vs C = 5.4**
- **A – 3** புள்ளிகள் **B – 3** புள்ளிகள் **C – 3** புள்ளிகள்

| | அடித்தது | வாங்கியது | **வித்தியாசம்** |
|---|---|---|---|
| A | 5+3 = 8 - | 4+4 = 8 - | 0 |
| B | 4+5 = 9 - | 5+4 = 9 - | 0 |
| C | 4+4 = 8 | 3+5 = 8 | 0 |

24. காலிறுதிப்போட்டி சமநிலையில் முடிவுற்றால் நேரடியாக தண்டனை உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும்.

25. **அரையிறுதி, இறுதிப்போட்டி சம நிலையில் முடிவுற்றால் மேலதிகமாக பத்து நிமிடங்கள் (2×5) வழங்கப்படும். இதிலும் சமநிலை காணப்படின் தண்டனை உதை மூலம் வெற்றி தீர்மானிக்கப்படும். 9, 11,பெண்கள் பிரிவுகளுக்கு தனியே 5 நிமிடங்கள் மட்டும் வழங்கப்படும்.**

26. தண்டனை உதை, இது 5, 1, 1, 1 என்னும் அடிப்படையில் வழங்கப்படும்.

27. **தண்டனை உதையின்போது பந்துக்காப்பாளரை மாற்றலாம். இறுதியாக மைதானத்தில் நின்ற அனைவரும் உதைத்த பின்னரே ஒரு வீரருக்கான இரண்டாவது சந்தர்ப்பமும், பிரதி ஆட்டக்காரருக்கான முதலாவது சந்தர்ப்பமும் வழங்கப்படும்.**

28. தண்டனை உதையின்போது இறுதியாக மைதானத்தில் நின்ற வீரர்கள், பிரதி ஆட்டக்காரர்கள், பயிற்சியாளர் தவிர்ந்த ஏனையோர் உள்ளே அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

29. ஆட்டத்தின்போது நடுவரின் தீர்ப்பே இறுதியானது. இதற்கு மாறாக மைதானத்தில் கலகத்தில் ஈடுபடுதலோ, ஆட்டத்தினை இடைநிறுத்தி வெளியேறுதலோ அனுமதிக் கப்படமாட்டாது. இவ்வாறு நடந்துகொள்ளும் அணிகள் தொடர்ந்து நடைபெறும் மூன்று சுற்றுப்போட்டிகளிலும் அடுத்த ஆண்டு தமிழீழக் கிண்ணத்துக்கான சுற்றுப்போட்டியிலும் கலந்துகொள்வதற்கான அனுமதி மறுப்பினைப் பெறும்.

   - **வெளிநாட்டில் இருந்து கலந்து கொள்ளும் அணிகள் அடுத்த ஆண்டு இச்சுற்றுப்போட்டியில் கலந்துகொள்வதற்கான அனுமதி மறுப்பினைப் பெறும்.**

30. மைதானத்தில் நடுவரின் தீர்ப்பை மீறி வீரர்/அணி/ஆதரவாளர்கள் நடுவரைத் தாக்க முற்பட்டால் குறித்த நபர் மைதானத்தை விட்டு வெளியேற்றப்படுவதுடன் தொடர்ச்சியாக மூன்று சுற்றுப்போட்டிகளில் கலந்துகொள்வதற்கு அனுமதி மறுக்கப்படும். அத்துடன் அபராதமாக 200 சுவிஸ் பிராங்குகள் விதிக்கப்படும்

- **வெளிநாட்டில் இருந்து கலந்து கொள்ளும் அணிகள் அடுத்த ஆண்டு இச்சுற்றுப்போட்டியில் கலந்துகொள்வதற்கான அனுமதி மறுப்பினைப் பெறும்.**

31. ஆட்டத்தின்போதோ, ஆட்டம் நடைபெற்று முடிந்த பின்னரோ தங்கள் கழக வீரர்களாலோ, ஆதரவாளர்களாலோ சுற்றுப்போட்டிக்கோ, நடாத்துனருக்கோ இடையூறு ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ளும் முழுப்பொறுப்பும் கழகத்தையே சாரும். இவர்களால் அசம்பாவிதங்கள் ஏதும் நிகழ்ந்தால் குறித்த கழகம் தொடர்ந்து நடைபெறும் மூன்று சுற்றுப்போட்டிகளிலும் அடுத்த ஆண்டு தமிழீழக் கிண்ணத்துக்கான சுற்றுப்போட்டியிலும் கலந்துகொள்வதற்கான அனுமதி மறுப்பினைப் பெறும்.

    - **வெளிநாட்டில் இருந்து கலந்து கொள்ளும் அணிகள் அடுத்த ஆண்டு இச்சுற்றுப்போட்டியில் கலந்துகொள்வதற்கான அனுமதி மறுப்பினைப் பெறும்.**

32. மதுபானம் மைதான வளாகத்தில் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.
33. வீரர்கள் மதுபானம், போதைப் பொருள் போன்றவற்றை உட்கொண்டிருப்பது கண்டுபிடிக்கப் பட்டால் குறித்த அணி தனது வெற்றி வாய்ப்பினை இழப்பதோடு. குறித்த வீரர்/வீரர்கள் அச் சுற்றுப்போட்டி முழுவதிலும் விளையாட அனுமதி மறுக்கப் படுவதோடு குற்றப்பணமாக அக்கழகம் 600 சுவிஸ் பிறாங்குகளை சம்மேளனத்திற்குச் செலுத்த வேண்டும்.
34. மதுபானம், போதைப்பொருள் பரிசோதனை எந்நேரமும் எம்மால் மேற்கொள்ளப் படலாம்.
35. **போட்டியின்போது இரு அணிகளினதும் சீருடைகள் ஒரே நிறமானதென நடுவர் தீர்மானிக்கும் பட்சத்தில் போட்டி நிரலில் இரண்டாவதாக இருக்கும் அணி தனது சீருடையை மாற்றவேண்டும். பதிலாக வேறு நிறத்திலான மாற்று சீருடை அல்லது பொருத்தமான மேலங்கி நடாத்துனர்களால் வழங்கப்படும்.**

மஞ்சள்/சிகப்பு அட்டை

36. **பிறழ் நடத்தை (ஒழுக்கவீனம்) காரணமாக சிகப்பு அட்டை மூலம் வெளியேற்றப்படும் வீரர், குறித்த ஆட்டத்திற்குப் பின்னர் வரும் இரண்டு ஆட்டங்களில் பங்குபற்றுவதற்கான அனுமதி மறுப்பைப் பெறுவர்.**
37. **விதிமுறை மீறல் சிகப்பு அட்டை பெற்று வெளியேறும் வீரர் அடுத்து வரும் அவர் அணிக்கான ஆட்டத்தில் பங்குபற்றுவதற்கான அனுமதி மறுப்பைப் பெறுவர்.**
38. ஆட்டத்தின்போது மஞ்சள் அட்டை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. ஆனால் ஒரே ஆட்டத்தில் இரண்டாவது மஞ்சள் அட்டை பெறின் குறித்த வீரர் மைதானத்தை விட்டு வெளியேற்றப்படுவதுடன் அவரது அணி ஆடும் அடுத்த ஆட்டத்திலும் பங்குபற்ற முடியாது.
39. ஆட்டத்தின்போது ஒரு வீரர் மஞ்சள் அட்டை பெற்றிருப்பின் ஆட்டத்தின் நேரத்திற் கேற்ப வெளியில் நின்றே மீளவும் தன் ஆட்டத்தினை தொடரலாம்.
40. மஞ்சள் அட்டை விபரம் : 15-20 நிமிடம் 2 நிமிடம்
41. **சுவிஸ் தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளன அங்கத்துவ அணிகளில் அங்கத்துவம் பெறாத வீரர்கள் வெளிநாடுகளிலிருந்து கலந்துகொள்ளும் அணிகளுக்காக விளையாட முடியும். ஆகக்கூடியது ஒரு அணிக்கு 3 வீரர்கள் விளையாடலாம்.**

42. ஆட்டத்தின் நடுவர்களாக சுவிஸ் உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் நடுவர்களே கடமையாற்றுவர். எந்தெந்த ஆட்டத்திற்கு யார்யார் நடுவர்கள் என்பதையும் அவர்களே தீர்மானிப்பர். நடுவர்களை மாற்றக்கோரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

43. இறுதி ஆட்டங்களில் கலந்துகொண்ட இரு கழகங்களும் தங்கள் சீருடையுடன் வந்தே வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

44. மூலைஉதை மைதானத்தின் மூலையில் வைத்து அடிக்கவேண்டும். 9,11,பெண்கள் பிரிவினர் முன்னிற்கு இருக்கும் மூலையில் வைத்து அடிக்கவேண்டும்

45. **Es gibt keinen Abstoss. Auswurf mit der Hand oder Driblling mit dem Fuss**.